முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1659

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.04.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. அறமெனும் சக்தியே அரங்கா வாழ்க
அன்னதான ஞான வள்ளலே தேசிகா வாழ்க
வரம்தந்து உலக மக்களை
வையகம் எங்கும் ஞானவான்கள் ஆக்கவேண்டி
2. வேண்டியே அற்புதம் நடத்துகின்ற
வேலவன் என் அவதார ஞானியே
காலனை வென்ற கலியுகத்தின் தவசியே
கந்தன் என் அம்சமே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
3. யானுமே ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் குரோதி தகர் திங்கள் துவக்க நாளில்
(குரோதி வருடம் சித்திரை மாதம் முதல் நாள், 14.04.2024, ஞாயிற்றுக்கிழமை)
நாளதுவும் அரங்கனுக்கு சக்தி பெருகி
ஞாலமதில் உலகோர்க்கு வழிநடத்தும் வண்ணம்
4. கோலமதாய் சர்வ ஞான சூட்சுமமோடு
குறையில்லா அதிபலங்கள் கூடி
விரைவுபட அரங்கமகான் எழுந்து அமர்ந்து இனிதே
விண்ணுலகம் வியக்க உலகோர்க்கு ஞான வழி நடத்தி
5. அரங்கன் சைவ நெறி
அகிலத்தை ஆளும் வண்ணம்
மண்ணுலகோர் ஏற்று பணிந்து
மகான் அரங்கனே சிறந்த குரு என
6. குரு என பின்பற்றும் வண்ணம்
குறையில்லா அற்புதத்தை ஆறுமுகன் யான்
நிறைவாக உலகமெங்கும் நடத்துவேன்
நிலவுலகில் அரங்கனால் இந்த அற்புதத்தை

7. அற்புதத்தை கலியுகத்தில் யான் நடத்தி
அகிலத்தை ஞானவான்கள் நிறைந்த பூமியாக
அகிலத்தை ஞானிகள் ஆளுகின்ற வண்ணம்
ஆற்றல்பட மாற்றி ஆறுமுகன் யான்
8. அரங்கனுக்காய் இந்த கலியுகத்தில்
அகிலத்தார் எல்லாம் ஆன்மீக ஞான களம் கண்டு
கண்டுமே உலகினில் ஆன்மீக ஞான ஆட்சிக்காலங்களும்
அறிவிப்பேன் சடுதி கண்டு அடையும் வண்ணம்
9. வண்ணமுடன் அற்புதத்தை
வழிமொழிந்து அரங்கனுக்காய் ஆறுமுகன் யான் நடத்துவேன்
அன்னதனால் உலகோர் அரங்கன் வழி வர
அகிலத்தில் சடுதி ஞான ஆட்சி மலரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–